சுருக்கம்

பணியமைப்பு – வேளாண்மை-உழவர் நலன் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி பி.உலகநாயகி என்பவரின் பணியினை 22.02.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் (வேநி9) துறை**

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது, ஐப்பசி மாதம் 1-ம் நாள்

**அரசாணை (3டி) எண்.170** நாள்:18.10.2023

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி8 / 34543 / 2022, நாள் 04.08.2022, 27.10.2022 மற்றும் 02.03.2023.

*****

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், திருநெல்வேலி, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணி புரிந்து வந்த போது 29.08.2012 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த அமரர் இரா.பிச்சையா அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு / மகள் செல்வி பி.உலகநாயகி என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து, ஆணையிடப்பட்ட வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 87333 / 2019, நாள் 12.02.2021-ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிணையம்) பணி நியமனம் செய்து, திருநெல்வேலி, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, திருநெல்வேலி, வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணை எண். நி2 / 6135 / 2018, நாள் 19.02.2021-ன்படி, தனியர், திருநெல்வேலி, வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில், மானூர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் கீழ் தேவர்குளம், வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவியாளராக (பிணையம்) 22.02.2021 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளதோடு, தனியரின் பணியினை 22.02.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.